**கித்துல் அபிவிருத்திச் சபையின கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2022 மற்றும் 2023**

---

கித்துல் அபிவிருத்திச் சபையின் 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைந்த இரண்டு ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இநத அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினால் அந்த நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தம் மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக முறைப்படியாக ஏடுகளையும் அறிக்கைகளையும் பேணுதல் அத்தியவசியமானதாகும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்களானது சட்டத்தினால் காட்டக்கூடிய வகையிலான காலப்பகுதியில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவையான காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படுகின்றன என உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 02 ஆண்டுகள் தொடர்பான நிதிக் கூற்றுக்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான வரைபு | 2022 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதி அறிக்கையானது 2023/05/09 ஆந் திகதி அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்கான ஒரு பிரதியுடன் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் நிதிக் கூற்றுக்களில் குறைபாடுகள் காணப்பட்டதனால் அவற்றினை சரிசெய்து துரிதமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டதனாலும் மேற்கூறிய காலத்திற்குள் பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்படாததனாலும் உரிய ஆவணங்களை | நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையினையும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆண்டறிக்கையானது இந்த அறிக்கைத் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அங்கீகரித்துக்கொள்ள முடியாதிருந்தது. உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட உடன் இது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். |

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம் | சபையினால் 2023 ஆம் ஆண்டில் 11 சந்தர்ப்பங்களின் போது முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கித்துல் அபிவிருத்திச் சபை முத்திரை வரிக்காக பதிவு செய்யப்பட்டிருக்காதது டன் உரிய தரப்பினர்களிடமிருந்து முத்திரைக் கட்டணம் அறவிடப்படும். இதன் பின்னர் முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்ததன் பின்னர் அனைத்து கொடுப்பனவு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஊழியர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | முத்திரை வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நிருவாக சபையினால் ஒழுங்கு முறையாக நியமிக்கப்படுகின்ற ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இருக்க வேண்டிய போதிலும் சபை ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ஒரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் அவ்வப்போது வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்கூறிய பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியாதிருந்தது. | சபையின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | |
| | (i) | நி.பி 137 | 2023 ஆம் ஆண்டில் 13 சந்தர்ப்பங்களின் போது அங்கீகரிக்கப்படாத வவுச்சர்களின் அடிப்படையில் ரூபா 645,186 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தற்பொழுது அனைத்து வவுச்சர்களும் அதிகாரமளித்தல், அங்கீகரித்தல், சான்றுபடுத்துதல் ஆகிய கட்டங்களைப் பின்பற்றியதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகரித்த வவுச்சர்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |
| | (ii) | நி.பி 139(5) | வவுச்சர்களின் மூலம் பணம் கொடுப்பனவு செய்யும் போது பணம் பொறுபவர்களின் அடையாளம் உறுதிப்படுத்தப்படாது 2023 ஆம் ஆண்டில் 39 சந்தர்ப்பங்களின் போது பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு கையொப்பம் இடப்படாது ரூபா 1,414,023 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பணத்தைப் பெறுபவர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட என்பதற்கு கண்டிப்பாக கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. | பணம் பெறுபவர்களினால் பணம் பெற்றுக்கொள்ளப் பட்டது என்பவதற்கு வவுச்சரில் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |
| **(ஈ)** | **2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட** | | | | |
| | (i) | நி.பி 371(2)(ஆ) | குறித்த செயற்பாட்டிற்கான உப கட்டுநிதியை வழங்கும் போது ஏதாவது ஒரு விசேட | வரிசை அமைச்சிடமிருந்து பெற்ற செயற்திட்டங்கள் | குறித்த செயலுக்கான உப கட்டுநிதியை வழங்குதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்பாட்டிற்காக ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்ச அளவு வரை மாத்திரம் குறித்த செயலுக்கான உப கட்டு நிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் உச்ச அளவு எல்லையை மிகைத்து இரண்டு சந்தர்ப்பங்களின் போது அதாவது ரூபா 240,000 மற்றும் ரூபா 135,000 வீதம் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | தொடர்பாக பணத்தைப் பெற்றுக் கொள்ளல் தாமதமடைதலும் அவசர தேவைப்பாடுகளும் மற்றும் கைக்காசினை வழங்குவதிலுள்ள சிக்கலின் அடிப்படைலும் ரூபா 240,000 முற்பணம் இச்சபையின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு அப்பணம் உரிய சங்கத்திற்கு வழங்கப்பட்டது . | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | நி.பி 371(5) | உப கட்டு நிதியானது அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 1,142,895 ஆன குறித்த செயலுக்கான 07 உபகட்டுநிதிகளைத் தீர்த்துவைப்பதற்காக 17 நாட்களுக்கும் 61 நாட்களுக்கும் இடைப்பட்ட காலதாமதம் இடம்பெற்றிருந்தது. | உரிய கால எல்லையின் போது வழங்கப்பட்ட செயற்பாடுகளை முடிவுறுத்தி முற்பணைங்களைத் தீர்த்துவைக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உப கட்டுநிதிகளைத் தீர்த்துவைத்தலானது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இடம்பெறுதல் வேண்டும். |
| (உ) | 2006 தேசிய பெறுகை முகவராண்மையின் மூலம் வழங்கப்பட்ட பெறுகை செயற்பாட்டு கோவையின் 4.2.1 ஆம் படிவம் | 2023 ஆம் ஆண்டில் சபையின் மூலதனச் செலவுகளுக்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 02 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் தொடர்புபட்ட படிவத்தின் பிரகாரம் வேலைகள், பொருட்கள், ஏனைய சேவைகள் என்பனவாக வகைப்படுத்தப்பட்ட விபரமான பெறுகைத் திட்டம் 2023 ஆம் ஆண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டிற்காக ஒரு பெறுகைத் திட்டத்தினைத் தயாரித்து உரிய திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விபரமான பெறுகைத் திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல. | | |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அதற்கு இணங்கிய வகையில் வழங்கப்பட்ட நிறுவன நல்லாட்சி தொடர்பான வழிகாட்டிக் கோவை | 2022-2024 ஆண்டுகளுக்கான தந்திரோபாயத் திட்டத்திற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இச்சபையினால் 2022 - 2024 கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவி ல்லை. | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டத்தினை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கித்துல் அபிவிருத்திச் சபையை ஸ்தாபிப்பதற்குரிய 2021 மார்ச் 17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காணிகளில் கிதுல் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக உதவிகளை வழங்குதல், மேம்படுத்துதல், கித்துல் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற காணிகளில் கால்நடை வளர்ப்புக்களில் ஈடுபடுவதனை மேம்படுத்துதல், கிதுல் பயிர்ச்செய்கைகளில் தென்னை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேம்படுத்துதலும் கித்துல் உற்பத்திப் பொருட்களை தயாரித்தல் மற்றும் அது | ஆகக்குறைந்த ஆளணியினர் காணப்படுவதன் காரணமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கமுடியாதுள்ளது. | கித்துல் அபிவிருத்திச் சபையினை ஸ்தாபிக்கும் தொடக்க குறிக்கோளினை நிறைவேற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ாாக உதவி வழங்குதலும் மேம்படுத்தலும் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் இன்றுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் 20 கித்துல் தொழில் முயற்சியாளர்களுக்கு GMP மற்றும் SLS சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் உற்பத்திப் பொருட்களை சர்வதேச சந்தைகளுக்காக மேம்படுத்துவதற்கு நிதி உதவிகளை வழங்குதல், உள்நாட்டில் கித்துல் மரங்களின் அளவினை அதிகரித்து வணிகச் செயற்பாடாக மாற்றுவதற்காக நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக ரூபா 8,550,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தபடாதிருந்ததுடன் அப்பணத்தில் ரூபா 7,750,000 தொகை அல்லது 90 சதவீதம் சேமிப்பாக இருந்தது. | போதியளவு ஆளணியினர் இல்லாததன் அடிப்படையில் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படவில்லை. பொருத்தமான விதை இனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாற்றுமேடை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் விளைச்சலற்ற காலத்தில் (off Season) பூக்களை தேடிக்கண்டு பிடிப்பது சிக்கலாக உள்ளதன் அடிப்படையில் கித்துல் மரங்களின் அளவினை அதிகரித்து வணிகச் செயற்பாடாக மாற்றுவதற்காக நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக ஆரம்ப சாத்தியவள ஆய்வின் மூலம் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் இயலுமையை ஆய்வுசெய்து நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கித்துல் உற்பத்தியாளர்களுக்காக ஆயுள் காப்புறுதி முறைமையை அறிமுகப்படுத்துதல் மற்றும் புதிய சந்தையை அறிமுகப்படுத்துதல் ஆகிய இரண்டு செயற்பாடுகள் தொடர்பாக ரூபா 17,000,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2023 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த மாதிரி கித்துல் தோட்டத்தை ஸ்தாபித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு நிதி இல்லாமை மற்றும் போதியளவு ஆளணியினரை இணைத்துக்கொள்ளல் இடம்பெற்றிருக்காமையின் காரணமாக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படவில்லை. அவ்வாறே இதுவரை ஆரம்பிக்கப்படாத அல்லது கடப்பாடுகள் உருவாக்கி கொள்ளப்படாத செயற்திட்டங்களை தற்காலிகமாக கைவிடுவதற்கு 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்படவில்லை. | ஆக்கபூர்வமாக வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் திருத்தங்கள் செய்வதன் மூலம் செயல் முன்னேற்றத்தினை சிறந்த மட்டத்தில் பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறே மாதிரி கித்துல் தோட்ட செயற்திட்டத்திற்கு பொருத்தமான ஒரு காணியை பெற்றுக்கொள்ளுதலும் முடியாதிருந்தது. | |
| (ஈ) | கித்துல் அபிவிருத்திச் சபையின் எதிர்கால செயற்பாடுகளை வெளிப்படுத்துதல் உள்ளடங்கலாக கித்துல் அபிவிருத்தி தேவையான ஏனைய சில செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் 2022 செப்தெம்பர் 29 ஆந் திகதி காலியில் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 4,052,850 செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை பிராந்திய மட்டத்தில் சபையின் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல் மற்றும் கித்துல் விவசாயிகள் சங்கத்தை தோற்றுவித்தல் இடம்பெற்றிருக்காததனால் அதன் மூலம் நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு போதியளவான பங்களிப்பு கிடைத்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கித்துல் அபிவிருத்திச் சபையினைத் தோற்றுவித்தல் இடம்பெற்றதனால் பிராந்திய மட்டத்தில் கித்துல் விவசாயிகளை அடையாளங்காணல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல், கித்துல் அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை பிராந்திய மட்டத்தில் விரிவுபடுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியதான பிரதான செயற்பாடுகளாகும். அதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல் அத்தியவசியமான விடயமானதுடன் இதன் மூலம் கதிதுல் அபிவிருத்திச் சபையின் எதிர்கால செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு தேவையான தரவு முறைமையை தயாரிப்பதற்கும் துறையின் அபிவிருத்திக்கான ஒரு அடித்தளத்தினை இடுவதற்கும் உதவியாக அமைந்துள்ளது. | கித்துல் அபிவிருத்திச் சபையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு முடியுமான வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.2 ஆளணி நிருவாகம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| கித்துல் அபிவிருத்திச் சபையின் அங்கீகரித்த ஆளணியில் காணப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி 15 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் | இச்சபை 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அவ்வப்போது நிதி அமைச்சினால் அரசாங்க செலவுகளை மட்டுப்படுத்துவதற்காக | சபையின் செயற்பாடுகளை முறைப்படியாக நிறைவேற்றுவதற்கு தேவையான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுதல் |

பதவிகள் மற்றும் 09 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டதனாலும் பொது முகாமையாளர், 04 உதவி/ பிரதி முகாமையாளர் பதவிகள், பதில் கடமை உத்தியோகத் தர்களால் கடமைகள் நிறைவேற்றப்பட்டதனாலும் தேவையான பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. 2023-11-22 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டளவில் 05 முகாமைத்துவ உதவி (தொழில்நுட்பமற்ற) உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வேண்டும்.